இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 08-08-2023

# ஏமாற்றப்படும் இந்தி பேசும் மக்கள்!

“இந்தியை அனைவரும் எதிர்க்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று அவர் சொல்லி இருக்கிறார்!

எவர்?

“மூத்த மொழியான தமிழ் மொழியில் என்னால் பேச முடிய வில்லையே?” என்று சில நாட்களுக்கு முன்னால் இராமேஸ்வரத்தில் வருத்தப்பட்டாரே அவர்தான்!

உள்துறை அமைச்சர் அமித்ஷா, இப்படி வருத்தப்பட்டு ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் இந்தியை அனைவரும் எதிர்க்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அருளாசி கூறி இருக்கிறார். இதுதான் இவர்களது உண்மை முகம் ஆகும். தமிழ்நாட்டுக்கு வந்தால் நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குப் போனதும் நஞ்சு பரப்புவதும் அவர்களது ஆட்டம் ஆகும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகச் சரியாகவே சொல்லி இருக்கிறார். இப்படி இரண்டக ஆட்டம் ஆடுவது அவர்களுக்குப் புதிதல்ல.

**இந்தியா என்பது பல்வேறு இனம் - மொழி - மதம் - பண்பாடுகள் கொண்ட மக்கள் வாழும் நாடு. வேற்றுமையில் நாம் காணும் ஒற்றுமையே இந்த தேசத்தைக் கட்டுக்கோப்பாகவும் அமைதியாகவும் வைத்திருக்கிறது. நமது கடந்த கால வளர்ச்சிக்கு இதுவே அடிப்படை. எதிர்கால வளர்ச்சிக்கும் இதுவே முக்கியம் என்பதும் வெளிப்படை. இதனை சீர்குலைக்கும் செயல்களை பா.ஜ.க. சிறப்பாகச் செய்து வருகிறது. ஒரே நாடு - ஒரே மதம் - ஒரே தேர்தல் - ஒரே தேர்வு - ஒரே உணவு - ஒரே பண்பாடு - என்ற வரிசையில் ஒரே மொழியை திணித்து மற்ற தேசிய இன மக்களின் மொழிகளை அழிக்கப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.**

இந்தி என்பது இந்தியாவின் ஆட்சி மொழி அல்ல. அரசு மொழியும் அல்ல. ஆங்கிலமும் இந்தியும் இந்தியாவின் அலுவல் மொழிகள் ஆகும். **‘இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி திணிக்கப்பட மாட்டாது’** என்று இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் வழங்கிய உறுதி மொழி இருக்கிறது. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசானது ‘இந்தி அரசாகச்’ செயல்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவானது குடியரசுத் தலைவர் அவர்களுக்கு சில பரிந்துரைகளை அனுப்பியது. இந்தியே ஆட்சி மொழி, அரசு மொழி, பொதுமொழி என ஆக்குவதற்கான திட்டத்தின் தொடக்கமாக அது அமைந்திருந்தது.

இந்தியா முழுவதும் இந்தியைத் திணிக்கப் பரிந்துரைக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையிலான குழுவின் அறிக்கையை எதிர்த்து, தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானம் இயற்றினார்.

**“இந்திய அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையானது, இந்தி மொழியின் மேலாதிக்கத்துக்கு வழிவகுப்பதாக அமைந்திருப்பதால் அந்த அறிக்கையை குடியரசுத் தலைவர் அவர்கள் முழுமையாக நிராகரிக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றம் கேட்டுக் கொள்கிறது. மாநில ஆட்சிமொழிகள் அனைத்தையும் ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக ஆக்கிடத் தேவையான அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசை இப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது”** என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டது 2022 அக்டோபர் மாதத்தில்.

ஒரு மொழியை அழிப்பது என்பது அந்த மக்களின் இன - கலாச்சார - பண்பாடுகளைச் சிதைப்பது ஆகும். இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிப்பதை எதிர்க்காவிட்டால் தமிழகத்தில் இந்தி தெரிந்தவர்க்கு மட்டுமே இனி ஒன்றிய அரசு வேலை என்ற நிலை உருவாகும். தேசிய அளவில் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டு, ஒதுக்கப்படும் நிலை உருவாகும். ஒன்றிய அரசின் அனைத்துத் திட்டங்களும் இனி இந்தியில் மட்டுமே வரும்.

தாய்மொழியை ஓரங்கட்டுவதன் மூலம் அதனை மட்டுமே நம்பியிருக்கும் உழைக்கும் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியறிவு இனி எட்டாக்கனியாகும். தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மைல்கல் தொடங்கி, தபால், விமானம், வங்கி, கப்பல், ஏ.டி.எம். அனைத்து சேவையும் இந்தியில் மட்டுமே இருக்கும். வரும்காலங்களில் கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல் ஐ.ஐ.டி. வரை இனி தமிழக மாணவர்கள் படிக்க முடியாத நிலை உருவாகும்.

**இந்தியை எதிர்ப்பது, இந்தித் திணிப்பை எதிர்ப்பது ஒரு மொழியைப் படிப்பதற்கான எதிர்ப்பன்று. அது நம் தேசிய இனத்தை அடக்கியாளும் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகும். அதனால்தான் நமது எதிர்ப்பை தொடர்ந்து பதிவு செய்து கொண்டே வருகிறோம். அவர்கள் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். நாம் எதிர்த்துக் கொண்டே இருக்கிறோம்.**

இந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நோக்கமல்ல. அவர்களுக்கு சமஸ்கிருதத்தை ஆட்சி மொழி ஆக்குவதுதான் இறுதி இலக்கு ஆகும். சமஸ்கிருதம் ஆட்சி மொழி என்றால் அடிக்க வருவார்கள். அதனால் இந்தியை முதலில் சொல்கிறார்கள். இந்தியை உட்கார வைத்து விட்டு சமஸ்கிருதத்தை பின்னர் எடுத்துவரும் தந்திரம்தான் இது.

இந்தியை ஆதரிப்பதன் மூலமாக - இந்தி பேசும் மாநில மக்களை மயக்கி - வாக்குகளை வாங்கலாமா என்ற நப்பாசை தான் பா.ஜ.க.வுக்கு இருக்கிறது. ‘இந்தியை வாழ வைத்தால் போதுமா? இந்தி பேசும் மக்களை வாழ வைக்க வேண்டாமா?’ என்று அந்த மாநிலத்து மக்கள் கேட்க மாட்டார்களா?

**அவர்களது எந்தக் கனவும் நிறைவேறப் போவது இல்லை.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, முரசொலி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# ராகுல்காந்தி மீண்டும் எம்.பி. ஆனார்!

## மக்களவைத் தலைவர் ஓம்பிர்லா அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக. 8–

இரண்டு ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைத்த உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் பறிக்கப்பட்ட எம்.பி. பதவியை மீண்டும் வழங்கி மக்களவை சபாநாயகர் நேற்று அறிவிப்பு வெளியிட்டார்.



பிரதமர் மோடி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியது தொடர்பாக, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு சூரத் செஷன்ஸ் நீதிமன்றம் 2 ஆண்டு தண்டனை விதித்தது. தண்டனை விதிக்கப்பட்ட அடுத்த 24 மணி நேரத்திலேயே மக்களவையில் இருந்து ராகுல் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். அவரது எம்.பி. பதவி பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து வயநாடு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் ராகுலின் சிறை தண்டனையை நிறுத்தி வைத்து தீர்ப்பளித்தது.

இதனால் மீண்டும் ராகுலுக்கு எம்.பி. பதவி வழங்கப்பட வேண்டும். ஆனால் வார விடுமுறையை காரணம் காட்டி, தகுதி நீக்க உத்தரவை வாபஸ் பெறுவது இழுத்தடிக்கப்பட்டது. ராகுல் தொடர்பான அனைத்து ஆவணங்களும் மக்களவை தலைமைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2 நாள் விடுமுறை முடிந்து நாடாளுமன்றம் நேற்று மீண்டும் கூடியது. இதில், ராகுலின் தகுதி நீக்க உத்தரவை மக்களவை சபாநாயகர் ஓம்பிர்லா ரத்து செய்து அறிவிப்பு வெளியிட்டார். இதன் மூலம் உடனே ராகுல் மழைக்கால கூட்டத் தொடரில் பங்கேற்றார்.

ஏற்கனவே ஒன்றிய அரசு மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் இன்று மற்றும் நாளை முதல் 2 நாட்கள் நடக்க உள்ளது. இதில் மணிப்பூர் நிலவரம் குறித்து முக்கிய விவாதம் நடைபெறும் சூழலில் நாடாளுமன்றத்தில் மீண்டும் ராகுலின் வருகை எதிர்க்கட்சிகளுக்கு கூடுதல் பலத்தை அளிக்கும். அதே சமயம், ஆளும் பா.ஜ.வுக்கு அதிக நெருக்கடியை ஏற்படுத்தும்.

ஏற்கனவே மணிப்பூர் விவகாரத்தில் ஆளும் பா.ஜ. கட்சி கடும் நெருக்கடியை சந்தித்து வரும் நிலையில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம், ராகுலின் வருகை என மழைக்கால கூட்டத் தொடரின் கடைசி வாரம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பிரதமர் மோடி வரும் 10ம் தேதி பேச உள்ளார்.

அதைத் தொடர்ந்து வரும் 11ம் தேதியுடன் மழைக்கால கூட்டத் தொடர் நிறைவடைய உள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாக மாறி வருகிறது!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்!

*சின்னாளபட்டி, ஆக. 8-*

*ஆத்தூர் ஊராட்சி 100 சதவீதம் குடிதண்ணீர் விநியோகத்தில் தன்னிறைவு பெற்றதற்கு ஒன்றிய அரசு விருது வழங்குகிறது. ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஐ.ஜம்ரூத் பேகம் தலைமையில் உள்ளாட்சி பிரதிநிதிகள் மாலை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர்.*

*திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு ஆத்தூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் நலத்திட்ட பணிகளை தொடங்க உத்தரவிட்டார்.*

*ஆத்தூர் ஒன்றிய ஒன்றியத்தில் ஆத்தூர் ஊராட்சி நிர்வாகம் பொதுமக்களுக்கு ஜல்ஜீவன் திட்ட மூலம் குடிதண்ணீர் வினியோகம் செய்து 100 சதவீதம் குடிதண்ணீர் விநியோகம் செய்து தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக மாறியதற்கு ஆகஸ்ட் 15ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி சிறந்த ஊராட்சிக் காண விருதினை ஆத்தூர் ஊராட்சிக்கு வழங்க உள்ளார்.*

*இதற்கான உத்தரவு வந்தவுடன் ஆத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஐ.ஜம்ரூத் பேகம் மற்றும் துணைத் தலைவர் சையது அபுதாகிர் தலைமையில் வார்டு உறுப்பினர்கள் ஊராட்சி செயலாளர் கண்ணன் ஆகியோர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை நேரில் சந்தித்து ஏலக்காய் மாலை மற்றும் சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்துப் பெற்றனர்.*

*அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் - முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் தன்னிறைவை பெற்று வருகின்றன என்றதோடு கிராம ஊராட்சிகளின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு செயல்படுவதால் கிராமங்களில் தார்ச் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, குடிதண்ணீர் வசதி அதிக அளவில் செய்து கொடுக்கப் படுகிறது என்றார்.*



*ஒன்றிய அரசு விருது பெறும் ஆத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஐ.ஜம்ரூத் பேகம் கூறுகையில், ஆத்தூர் ஊராட்சி 100 சதவீதம் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்து தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக மாறியதற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கொடுத்த நல் ஆதரவு தான் என்றதோடு எங்கள் ஊராட்சியில் ஏற்பட்ட குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்க அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ததால் இன்று நாங்கள் விருதுபெறும் அளவிற்கு தகுதி பெற்றுள்ளோம் என்றார்.*

*நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் சத்தியமூர்த்தி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் மார்க்கெட் மேரி, தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், பெரியகுளம் எம்.எல்.ஏ. சரவணகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றியச் செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ரெட்டியார்சத்திரம் ஒன்றியச் செயலாளர் ப.க.சிவகுருசாமி,*

*ஊரக ஊரக வளர்ச்சி துறை திருச்சி மாவட்ட நிர்வாக பொறியாளர் நாகஜோதி, தி.மு.க. நிர்வாகிகள் அம்பை ரவி, ஆத்தூர் ஹக்கீம், எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பாலாஜி, அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன்,*

*கூட்டுறவு வளர்ச்சி அலுவலர்கள் சக்கரவர்த்தி, மணிமாறன், பள்ளபட்டி கணேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், மாவட்டப் பிரதிநிதிகள் இளங்கோ, எல்லை இராமகிருஷ்ணன், தி.மு.க. நிர்வாகி நந்தி நடராஜன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, நேற்று, அவரது நினைவிடத்தில். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தார். உடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி ஜி.பி.பாண்டியன், இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பாம்பன் ராஜகுரு, பொதுக்குழு உறுப்பினர் செங்கல்பட்டு சதீஷ் ஆகியோர் உள்ளனர்.